**தமிழ் நாடு அரசு**

சுருக்கம்

பணிகள் - தமிழ் நாடு தலைமைச் செயலகப் பணி - தலைமைச் செயலகப் பணியில் உதவியாளர்கள் - தட்டச்சில் தேர்ச்சி - நிபந்தனை ரத்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (யு) துறை.

அரசு ஆணை (நிலை) எண்.197 நாள் 17.10.2000.

படிக்கப்பட்டது.

1. அரசு ஆணை (நிலை) எண்.58, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (டி) துறை, நாள் 28.2.1995.
2. அரசு ஆணை எண்.174, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பி) துறை, நாள் 8.9.2000.

*****

**ஆணை.**

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசு ஆணையின்படி தலைமைச் செயலகப் பணிக்கு நேரடி நியமனம்/ பணி மாறுதல் / பதவி உயர்வு முறையில் நியமனம் செய்யப்படும் உதவியாளர்கள் தங்கள் தகுதிகாண் பருவத்திற்குள்/ இரண்டு வருடத்திற்குள் ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு தேர்வில் இளநிலையில் தேர்ச்சி பெற வேண்டும். அவர்கள் உதவிப் பிரிவு அலுவலர் பதவி உயர்விற்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு தேர்வில் முதுநிலையில் தேர்ச்சி பெற வேண்டும்.

2. 05.08.2000 அன்று நடைபெற்ற 55வது தமிழ் நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் இணைந்த தட்டச்சர் பதவியில் நியமனம் செய்யப்பட்டவர்கள் தட்டச்சில் தேர்ச்சி பெற வேண்டும் என்று பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பி) துறையின் 14.12.1995 நாளிட்ட அரசு ஆணை 50ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை மாற்றி பழைய நிலைக்கே கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்ததன் அடிப்படையில் 08.09.2000 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் அரசு ஆணை (நிலை) எண்.174ல் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் இணைந்த தட்டச்சர் என்று ஒருங்கிணைக்கப்பட்ட பதவியினை மீண்டும் இளநிலை உதவியாளர், தட்டச்சர் என்று தனித்தனியாக பிரித்து ஆணை வெளியிடப்பட்டது.

3, மேற்கூறிய அரசின் முடிவு தமிழ் நாடு தலைமைச் செயலக உதவியாளர்களுக்கும் பொருந்தும். தலைமைச் செயலகத்தில் உதவியாளர்களாக நியமிக்கப்படுபவர்கள் தட்டச்சில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற ஆணை 1995ல் தமிழ் நாடு அமைச்சுப் பணி இளநிலை உதவியாளர்களுக்கு வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிப்படையிலேயே வெளியிடப்பட்டது. எனவே, அரசு இதனை தீர மறு பரிசீலனை செய்து தமிழ் நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு முன் தேதியிட்டு விலக்களிக்கப்பட்டது போல் தமிழ் நாடு தலைமைச் செயலக பணிகளுக்கான சிறப்பு விதிகள் 14 மற்றும் 16ல் குறிப்பிடப்பட்டுள்ள தட்டச்சு தேர்வு குறித்த தகுதிகளை 28.02.1995 முதல் முன்தேதியிட்டு விலக்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது.

4. மேற்கூறிய நிலையில் தமிழ் நாடு தலைமைச் செயலகப் பணிக்கு நேரடி நியமனம்/ பணி மாறுதல் மற்றும் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யப்படும் உதவியாளர்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு தேர்வில் இளநிலை மற்றும் முதுநிலையில் தேர்ச்சி பெறுவதிலிருந்து 28.02,.1995 முதல் முன் தேதியிட்டு விலக்களித்து இதன் மூலம் ஆணை வெளியிடப்படுகிறது.

5. தலைமைச் செயலக பணிகளுக்கான சிறப்பு விதிகள் 14 மற்றும் 16க்கு விதித்திருத்தங்கள் தனியே பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையிலிருந்து (டி பிரிவு) வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சையது முனீர் ஹோதா,
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (டி/எம்/பி/கே) துறைகள் (4 நகல்கள்)
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் உள்ள அனைத்துப் பிரிவுகள்
தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 (4 நகல்கள்)
சார் சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,சென்னை-9
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை 9/18.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம்,
தலைமை செயலரின் தனிச் செயலர், சென்னை-9
தலைவர், தலைமை செயலக சங்கம், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஒம்/-
பிரிவு அலுவலர்.